**செ. கு. எண்: 112** **நாள்:19.09.2019**

<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 19.9.2019</u>

சென்னை மாவட்டம், ஆலந்தூர் வட்டம், முகலிவாக்கம் கிராமத்தைச் சேர்ந்த திரு. செந்தில்குமார் என்பவரின் மகன் செல்வன் தீனா என்கிற திவா என்பவர் **15.9.2019** அன்று முகலிவாக்கம் பழைய போஸ்ட் ஆபிஸ் அருகே இரு சக்கர வாகனத்தை தள்ளிக் கொண்டு சென்று கொண்டிருந்த போது, எதிர்பாராத விதமாக அறுந்து கிடந்த மின்கம்பியை மிதித்ததில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் வட்டம், சிட்லபாக்கம் கிராமத்தில் அமைந்துள்ள மின் கம்பம் மீது சரக்கு ஏற்றிச் சென்ற லாரி மோதியதில், மின் கம்பம் சாய்ந்து, மின் கம்பி அறுந்து விழுந்து கிடந்ததை கவனிக்காமல் திரு. பாலகிருஷ்ணன் என்பவரின் மகன் திரு. சேதுராஜ் என்பவர் எதிர்பாராத விதமாக மிதித்ததில், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகுந்த வேதனை அடைந்தேன்.

மேற்கண்ட இரண்டு துயரச் சம்பவங்களில் உயிரிழந்த செல்வன் தீனா என்கிற திவா மற்றும் திரு. சேதுராஜ் ஆகியோரின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மின்சாரம் தாக்கி உயிரிழந்த செல்வன் தீனா என்கிற திவா மற்றும் திரு. சேதுராஜ் ஆகியோரின் **குடும்பத்தினருக்கு தலா மூன்று லட்சம் ரூபாய்** முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**